**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.76/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | இளவரசி |
| Husband Name | : | குருநாதன் |
| Village | : | குன்னம் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 47/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.04.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி 1, 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். குன்னம் பேருந்து நிலையம் அருகே சுமார் 26 செண்ட் இடத்தை எனது நடு மாமியார் ரோசாக்கிளி என்பவர் சுத்த கிரையமாக எனது கணவர் குருநாதன் என்பவரது பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த இடத்தில் சுமார் 3 செண்ட் இடத்தில் வீடு கட்டியுள்ளோம். மீதம் உள்ள இடத்தில் சுற்றி கம்பி வேலி கட்டி டூவீலர் ஸ்டேன்ட் அமைத்துள்ளோம். மேற்கண்ட இடத்தில் எதிரிகள் தங்களுக்கும் பங்கு உள்ளதாக கூறி சண்டையிட்டார்கள். கடந்த 05.09.2018 அன்று மாலை 3.00 மணியளவில் எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்தார்கள். லதா என்பவர் கவக்குச்சியால் இடது தோள்பட்டையில் அடித்தார், பிரபுதேவா கம்பியால் என்னை அடித்தார். அண்ணாதுரை கருவேலிக்கட்டையால் எனது முதுகில் அடித்து கம்பி வேலிகளை அறுத்து எறிந்தார்.

மேலும், எனது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினார். நான் சத்தம் போடவே எனது கணவர் வந்து தடுத்தார். அவரையும், அண்ணாதுரை மற்றும் பிரபுதேவா ஆகியோர் கம்பியால் முதுகில் அடித்தனர். சத்தம் கேட்டு அருகில் இருந்த மரியதாஸ், செருப்பு கடை வைத்திருக்கும் செல்வி மற்றும் சிலர் வந்தனர். பின்னர் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் இது சம்பந்தமாக குன்னம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் நான் கொடுத்தது தான். **அது அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.